# ஒவ்வொருவருக்கும் சிலர் தேவை! (மத்தேயு 16:13-19)

*மனிதனை சிருஷ்டித்தபின், தேவன், "மனிதன் தனிமையா யிருப்பது நல்லதல்ல" (ஆதி. 2:18) என்றார். தனிமை மிகப் பயங் கரமானது.*

> வேறு எதைக்காட்டிலும் தனிமை என்ற நோய் ஜனங்களை இந்நாட்களில் அதிகமாய்ப் பாதித்து வருகிறது. "இது இந்த யுகத்தின் மிகப் பெரிய பாழாக்கும் நோய்" என்று சுவிஸ் நாட்டைச் சேர்ந்த புகழ் பெற்ற உளவியல் அறிஞர் கூறுகின் றார். சமீபத்தில் நன்கு தேர்ச்சியடைந்த ஒரு மருத்துவர், "மனித னின் நிலைகளில் தனிமையைப்போல் தீவிரமானதும், உலகளா வியதும் வேறு எதுவும் இல்லை"[1] என்று கூறினார்.

வாழ்க்கையில் நம்மைத் தாங்கி நடத்தும் நண்பர்கள் குழுவாகிய[2] ஒரு "வலைப் பின்னல்" நம் எல்லாருக்கும் தேவைப் படுகிறது.

ஆவிக்குரிய விஷயங்களிலும் கூட இது உண்மையா யிருக்கிறது. "நீ ஒரு கிறிஸ்துவனான பிறகு உனக்கு நீயே எல்லாம்" என்று தேவன் சொல்லியிருக்கலாம். ஆனால் கூட, நம் எல்லாருக்கும் பலம் மற்றும் உதவிகள் தேவை என்று அவர் அறிவார். தேவனுடைய சித்தத்தின்படியான தாங்கி நடத்தும் குழுவை ஏற்படுத்தப் போவதாக இயேசு கொடுத்த வாக்குத் தத்தத்தைப் பற்றி இப்பாடம் நமக்குக் கூறுகின்றது.

இயேசு தமது ஊழியத்தின் கடைசிப் பகுதியை நெருங்கிக் கொண்டிருந்தார். அப்போது, லூக்கா 9:51ல் உள்ள வழக்குச் சொல்லின்படி, இயேசு, "எருசலேமுக்குப் போகத் தமது முகத் தைத் திருப்பினார்" என்று காண்கிறோம். இது இயேசுவைப் பொறுத்தமட்டில் முக்கியமான காலமாய் இருந்தது. அவரு டைய சீஷர்களுக்கும் இது முக்கியமான நேரமாயிருந்தது.

# உங்களுக்கு ஒருவர் தேவை

நமது வேதவசனப் பகுதி, "பின்பு இயேசு பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்த போது" (வ. 13அ) என்று தொடங்குகிறது.

பலஸ்தீனத்தில் செசரியா என்ற பெயரில் இரண்டு ஊர்கள் இருந்தன. ஒன்று மத்திய தரைக்கடல் ஓரத்தில் இருந்தது. இந்த வசனத்தில் நாம் படிக்கும் ஊர் பலஸ்தீனத்தின் வடக்கு எல்லையில் இருந்தது. இயேசு பிறந்தபின் சில நாட்களில், காற்பங்கு தேசாதிபதியாகிய[3] ஏரோது பிலிப்பு என்பவன் பழைய நகரமாகிய பேனியஸ் என்ற நகரை மறுபடியும் கட்டியெழுப்பி, அதற்கு பிலிப்புச் செசரியா என்று பேரிட்டான். இது செசார் ராயனையும், அவனையும் கனப்படுத்திக் கொள்வதற்காகச் செய்யப்பட்டது. எர்மோன் மலையில் அடிவாரத்திலிருந்த ஒரு மிகப் பெரிய பாறையின் மீது சுண்ணம்புச் சுவரால் கட்டப்பட்ட கோட்டைகளால் இந்நகரம் உருவாயிற்று என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இயேசு ஜனங்களுக்குப் பிரசங்கம் செய்து கொண்டும் உதவி செய்து கொண்டும் வந்தபோது அவரும் அவருடைய சீஷர்களும் பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்து சேர்ந்தனர். இயேசு, பூமியில் அவர் செய்த ஊழியத்தில் பிரயாணம் செய்ததில் வடக்கு எல்லையில் இப்பகுதியே எல்லையாகும்.

இயேசு அந்தப் பகுதியை அடைந்த பொழுது, தமது சீஷர்களுக்கு ஒரு பரீட்சை வைத்தார். பரீட்சை என்பது, மாணவர்கள் மற்றும் ஆசிரியர் என்ற இரு தரப்பாருக்கும் அச்சம் தரும் சம்பவமாகும். எவ்வகையிலும், ஒரு பரீட்சை என்பது மாணவர்களைக் காட்டிலும் ஆசிரியரையே அதிகமாய்ச் சோதனை செய்வதாயிருக்கிறது. "நான் வலியுறுத்த வேண்டிய போதனைகளை முடித்திருக்கிறேனா?" என்று ஆசிரியர் வியப்படைகிறார். இயேசு, "மனுஷகுமாரரானாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்?" (வ. 13ஆ) என்று கேட்டு இந்தப் பரீட்சையைத் தொடங்குகிறார்.

அதற்கு சீஷர்கள், "சிலர் யோவான் ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும்; வேறு சிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள்," என்றார்கள் (வ. 14). இயேசு யார் என்பது பற்றி ஜனங்கள் இடர்ப்பாடு அடைந்து கொண்டிருந்தனர். மேசியாவின் பணிகளை இயேசு செய்து

கொண்டிருந்தாலும், அவர் வருகையானது அவர்கள் நினைத் திருந்த வகையில் இருக்கவில்லை, இருப்பினும் அவர் விசேஷித் தவர் என்று அவர்கள் அறிந்தனர். எனவே அவர்கள் அவரை யோவான் ஸ்நானன், எலியா, எரேமியா அல்லது தீர்க்கதரிசி களில் ஒருவர் என்று சொன்னார்கள்.

"ஆத்துமா இடம் பெயர்தல்" என்ற முன்நாளைய மறு பிறவிக் கொள்கையை நம்பியதால்தான் யூதர்கள் இவ்வாறு சொன்னதாகச் சிலர் எண்ணுகின்றனர். யோவான் மரித்தோரி லிருந்து எழுந்ததாகக் கூறி (மாற்கு 6:14, 16), ஏரோதுதான் இவ்வதந்தியை துவக்கி வைத்தான். மேலும், மேசியாவுக்கு வழியை ஆயத்தம்பண்ண, எலியாவை அனுப்புவேன் (மல்கியா 4:4-6)[4] என்ற தேவனுடைய வாக்குத்தத்தம் பற்றி யூதர்கள் வினோதமான கருத்துக்கள் கொண்டிருந்தனர். யூதர்கள் மறுபிறவிக் கொள்கையை நம்பினார்களா இல்லையா என்று நான் அறியேன் - அவர்கள் அதை நம்பியிருந்தாலும், மறுபிறவிக் கோட்பாடு ஒரு தவறான உபதேசம் ஆகும். வேதம், "அன்றியும் ஒரே தரம் மரிப்பதும் (அநேகந்தரம் அல்ல) பின்பு (மரணத்திற்கு பின்பு) நியாயத் தீர்ப்படைவதும் (பூமியில் ஒரு புதிய வாழ்க்கையை வேறொரு உடலில் பெறுவது அல்ல) மனு ஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" (எபி. 9:27) என்று கூறுகிறது.

சிலர் இயேசுவை மேற்சொன்ன சிலரில் ஒருவராக இருப்பார் என்று ஏன் நம்பினர், என்பதை விடுத்து, இம் மாபெரும் நபர்களிடம் இருந்த சில குணாதிசயங்களை ஆராய்ந்தால், அவை இயேசுவைப்பற்றி நமக்கு சிலவற்றைக் கூறுகின்றன: யோவான் திட நம்பிக்கையுள்ள மனிதனா யிருந்து, மாய் மாலத்தை எதிர்த்துத் தயக்கமின்றிப் பேசினார். அதே போல இயேசுவும் யூதர்களின் மாய்மாலத்தை வெளிப் படுத்தினார். எலியா தைரியமுள்ள மனிதனாயிருந்து, துன் மார்க்க சக்திகள் அனைத்தையும் தனி ஒருவராய் எதிர்த்து நின்றார். அதேபோல் இயேசுவும், அவரது காலத்தில் இருந்த வல்லமையுள்ள மார்க்க அதிகாரிகளுக்கு எதிர்த்து நின்றார். எரேமியா இரக்ககுணம் கொண்டவராய், ஜனங்களுக்காக அழுதார்-அதேபோல் இயேசுவும்கூட அநேக வேளைகளில் கவலையினால் கண்ணீர் விட்டிருக்கிறார். அவரைக் கவனித்த ஜனங்களில் சிலர் அவரது உரமான குணங்கள் என்ற

*பகுதியையும், சிலர் அவரது மென்மையான குணங்கள் என்ற பகுதியையும் கண்டனர்.*

*இந்த ஒப்பீடுகள் எல்லாம் வெறும் பாராட்டுக்கள்தான்- அவர்கள் இயேசுவைப் பற்றி எண்ண வேண்டிய அளவு எண்ண வில்லை. இயேசுவைப் பெரியவர் என்று நாம் நினைக்கும் வரை -அதாவது அவர் மகாப் பெரியவர் தேவனுடைய சொந்த குமாரன் என்று நாம் நினைக்காதவரை சாத்தான் கவலைப் படுவதில்லை.*

*இயேசு, இதன் பிறகு பரீட்சையின் இரண்டாவது கேள்வி யைத் தமது சீஷர்களுக்கு தருகிறார். இது நிறைவுத் தேர்வில் 100 சத மதிப்பெண் பெற்றுத்தரும் கேள்வியாகும். "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்'' (வ. 15).*

*"இயேசுவைப்பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்ற கேள்வியே எந்த ஒரு மனிதரிடமும் கேட்க வேண்டிய முக்கிய மான கேள்வியாகும். இந்தக் கேள்விக்கு சரியான பதில் நீங்கள் சொல்லாவிட்டால், இந்த வாழ்க்கையை, நித்தியத்தில் பிரவே சிக்கும்படி பிரயோஜனப்படுத்த உங்களால் கூடாது.*

*நான் இயேசுவாயிருந்தால், இவ்விடத்தில் ஒரு பயம் நிறைந்த ஆசிரியராய் இருந்திருப்பேன்.[5] எனது எண்ணங்கள் பின்வரும்மாறு இருந்திருக்கும்: "நான் யார் என்ற உண்மையை - எனது சீஷர்களுக்குள் ஆழமாய் ஊன்றுவதற்காகவே, கடந்த மூன்று ஆண்டுகளாக-எனது போதனைகள், அற்புதங்கள் மற்றும் என் வாழ்க்கை இவற்றை ஒப்புக் கொடுத்தேன்; அவர் கள் இந்த உண்மையைப் புரிந்து கொண்டார்களா? நான் ஆசிரியர் என்ற முறையில் எந்த அளவு வெற்றி பெற்றுள்ளேன்?"*

*பேதுரு இந்தக் கேள்விக்கு பதில் அளித்தார். அதிகம் பேசுவதில் பேதுரு பேர் பெற்றவர், பாதத்தை எடுத்து வாயில் வைத்துக் கொள்பவர்.[6] இருப்பினும் இவ்விடத்தில் பேதுரு சரியானதையே சொன்னார்: "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" (வ. 16). "கிறிஸ்து" என்றால் "அபிஷே கம் பண்ணப்பட்டவர்" என்று பொருள். இதற்குச் சரியான கிரேக்க வார்த்தை "மேசியா'' ஆகும். பழைய ஏற்பாட்டின் காலத்தில் தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள் மற்றும் இராஜாக்கள் ஆகியோர் அபிஷேகம் பண்ணப்பட்டனர். இயேசு இந்த*

மூன்று தன்மைகளும் உள்ளவராய் விளங்கினார். "குமாரன்" என்ற எபிரெயச் சொல் வழக்கு, "இயல்புகளில் பங்கேற்பவர்" என்று பொருள்படும். இவ்விதமாய், "ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்" என்பது "தேவனுடைய இயல்புகளில் பங்கேற்பவர்" என்று பொருள்படும்.

இந்த விளக்கத்தை சற்று நிதானித்துப் பாருங்கள். நமக்குத் தேவைப்படும் ஒரு நபரைப் பற்றி இங்கு கூறப்படுகிறது. இதைப்பற்றி அதிகமாய் கூறும்முன், சிலர் இதற்குப் பதிலாக கூறும் சில வார்த்தைகளை உங்களுக்கு முன் வைக்க விரும்புகிறேன்.

இயேசு அவனை நோக்கி: "யோனாவின் குமாரனாகிய[7] சீமோனே, நீ பாக்கியவான் (வ. 17அ) என்றார். இதற்கு முன்பே இயேசு, தம்மை அறிக்கையிடுகிறவர்களை, தாமும் அறிக்கை யிடுவதாகக் கூறியுள்ளார் (மத். 10:32): இப்போது அவர் பேதுருவை அறிக்கையிட்டார். மேலும் இயேசு தொடர்ந்து, "மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை" (வ. 17ஆ). பேதுரு இந்த சத்தியத்தை எந்த ஒரு மனிதரிடமும் கற்றுக் கொள்ளவில்லை. மனித ஞானமானது, ஜனங்களோடு ஒத்துப் போவதாய் - அதாவது இயேசுவை யோவான் ஸ்நானன், எலியா, எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்று கூறுவதாய் - அமைந்திருக்கும். மாறாக, தேவனே பேதுருவுக்கு இச்செய்தியை வெளிப்படுத்தியதாக இயேசு கூறினார்: "பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப் படுத்தினார்" (வ. 17இ). இந்தக் கேள்வியைக் கவனியுங்கள்: பேதுரு இந்த சத்தியத்தை எவ்விதம் கற்றார்? இது இயேசுவிட மிருந்து கற்றுக் கொள்ளப்படவில்லையா? இயேசு "தேவ னிடத்திலிருந்து" வந்தவர் (யோவா. 8:28). அவர் தெய்வீகமானவர்!

இதன் பிறகு இயேசு சொன்னார்:

> மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ, அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்

என்றார் (வ. 18-19).

முதலாவது பதில் அளித்தவர் பேதுரு, இவ்விதமாய் அவர் முதல் வகுப்பில் நிற்கத் தன்னைத் தகுதியாக்கிக் கொண்டார்.[8] இதை நாம் மறுக்க முடியாது: பேதுருவுக்கு விசேஷித்த தகுதி அளிக்கப்பட்டது.

முதலாவது, இயேசு அவரை முறைப்படி, "பேதுரு" என்று அழைத்தார். இப்பெயரே அவருக்குப் பிரசித்தமானதாகும். "பேதுரு" என்றால் "பாறை" என்று பொருள்படும். பேதுரு "உறுதியற்ற மணல்" போன்ற சீஷத்துவத்திலிருந்து "பாறை போன்ற உறுதியான" சீஷத்துவத்துக்கு வளர்ந்திருப்பதை இயேசு இவ்விடத்தில் கூறுகிறார். ஆனால் இம்மாறுதல் அப்போது முழுமையாயிற்று என்று கூறவில்லை. (அடுத்த அதிகாரத்தில் இயேசு, மோசே, மற்றும் எலியா ஆகியோருக்கு மூன்று கூடாரங்கள் போடுவேன் என்று சொன்னதன் மூலம் மறுபடியும் பாதத்தை வாயில் வைத்துப் பேசினார். அநேக அதிகாரங்களுக்குப்பின்[9] அவர் கர்த்தரை மறுதலித்தார்). அவர் வளர்ந்து கொண்டிருப்பதையே இது அர்த்தப்படுத்துகிறது. "பேதுரு" என்ற பெயர் ஆவிக்குரிய முறையில் அவரது முன்னேற்றம் குறித்த விளக்கமாகவும், இன்னும் எவ்வளவு அவர் வளரவேண்டும் என்பதை முன்னுரைப்பதாகவும் உள்ளது.

இரண்டாவதாக, இயேசு இராஜ்யத்தின் திறவுகோல்களை அவரிடத்தில் கொடுத்தார். திறவுகோல்கள் என்பது பேதுருவோடு சம்பந்தப்பட்ட அடையாளமாய் அநேக இடங்களில் காணப்படுகிறது. (ரோமாபுரியில் உள்ள தூய.பேதுருவின் பேராலயத்தில் - இன்னும் அநேக இடங்களிலும் - பேதுருவுக்கு வைத்துள்ள சிலைகளின் கைகளில் திறவுகோல்களைப் பிடித்திருப்பதைக் காணலாம்). யூதர்கள் மற்றும் புறஜாதியார் யாவருக்கும் இராஜ்யத்தைத் திறந்து வைக்கும் சிலாக்கியத்தைப் பேதுரு பெற்றுக்கொண்டார். யூதர்களுக்கு அப். 2லும், புறஜாதியாருக்கு அப். 10லும், இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதைப் பற்றி முதலாவதாகப் பேசும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டவர் பேதுரு ஆவார்.

வசனம் 19ல் இயேசுவால் கூறப்படும் "கட்டுதல்," "கட்டவிழ்த்தல்" என்ற வார்த்தைகள் எதைக் குறிக்கின்றது? பேதுரு

தேவ ஏவுதலினால் பிரசங்கம் செய்வார், என்பதையே இது குறிக்கின்றது (யோவான் 14:26; 16:13). NASB மொழி பெயர்ப்பில் முதலாவதாக அச்சிட்ட வேதத்தில் வசனம் 19ல், மூல பாஷையின் வினைச் சொற்கள் (நமது தமிழ் வேதாகமத்தில் உள்ளது போலவே) சரியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. "பூலோகத்தில் நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப் பட்டிருக்கும்."[10] அதாவது, பேதுருவின் செய்தி முதலாவது பரலோகத்தில் கட்டப்பட்டு, பின்பு பூலோகத்தில் கட்டப்படும். அவரது செய்தி அவரால் அல்ல மாறாக தேவனால் உண்டானதாயிருக்கும்.

பேதுரு ஒரு விசேஷித்த மனிதர் என்பதில் ஐயமில்லை. அப்போஸ்தலர்களின் பெயர்ப்பட்டியல் அனைத்துமே பேதுருவின் பெயரோடு தான் தொடங்குகின்றன. இவரை நாம் ஒரு போதும் குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது. அதே வேளையில் நாம் இவரைப் பற்றி அதிகமாகவும் மதிப்பிட்டு விடக் கூடாது.

மத்தேயு 16:13-19 வசனங்களின் மைய நோக்கம் - நமக்குத் தேவையாய் இருக்கிறபடி இயேசுவே மேசியா என்பது தான். ஆனால் சிலர் இந்த வசனத்தைப் புரட்டி, சுற்றி வளைத்து, பேதுருவை உயர்த்துவதையே தங்கள் நோக்கமாக வைத்துப் பேசுகின்றனர். அவர்கள், பேதுருவை ஒரு கல்லாகவும், அக் கல்லின்மேல் கிறிஸ்து தமது சபையைக் கட்டியதாகவும் போதிக்கின்றனர். "கட்டவும்" "கட்டவிழ்க்கவும்" தனிப்பட்ட ஒரு தகுதியைப் பேதுருவே பெற்று இருந்ததாக அவர்கள் வலியுறுத்துகின்றனர். அவர்கள், பேதுருவே சபையின் முதலாவது தலைவர் என்று அறிவிக்கின்றனர். மேலும் இத்தலைமைப் பதவியானது அவரது வழி வழி வந்தவர்களுக்கு வரிசையாய்த் தரப்பட்டு, இப்போதுள்ள அவ்வழி வந்த தலைவரே உங்களுக்கும் எனக்கும் தேவை என்கின்றனர். இருப்பினும் வேதம் இந்தக் கருத்துக்களில் எதையும் போதிப்பதில்லை.

முன்பே குறிப்பிட்டபடி, ''பேதுரு'' என்ற வார்த்தை "பெட்ராஸ்" என்ற கிரேக்க வார்த்தையைத் தழுவியதாகும். இதற்கு, கையில் எடுக்கக்கூடிய ஒரு கல் என்று பொருள். மத்தேயு 16:18ல் உள்ள "கல்" என்ற சொல் கிரேக்க வார்த்தை

யாகிய "பெட்ரா" என்பதை மொழிபெயர்த்து எழுதப்பட்ட தாகும். இவ்வார்த்தை பிலிப்பி செசரியா பட்டணம் கட்டப் பட்டிருந்த பெரிய பாறை போன்ற வடிவத்தை[11] குறிக்கும். "நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்" என்று இயேசு கூறும்போது, அவர் ஒரு சொல்லா டல் நிகழ்த்தினார். "பேதுருவே நீ ஒரு சிறிய கல்லாய் இருக்கி றாய், ஆனால் நான் (நீ இப்போது அறிக்கையிட்ட) பெரிய பாறையின்மேல் என் சபையைக் கட்டுவேன்" என்றே அவர் கூறினார்.

கட்டுவது, கட்டவிழ்ப்பது என்பதைப் பொறுத்தமட்டில், இதே வாக்குத்தத்தம் இரண்டு அதிகாரங்களுக்குப் பின், எல்லா அப்போஸ்தலர்களுக்கும் கொடுக்கப்பட்டது (மத்தேயு 18:18).

மத்தேயு 16:13-19 வசனம் பேதுரு முக்கியமானவர் என்று போதிக்கிறது, ஆனால் அவர் சபையின் முதல் தலைவர் என்று போதிப்பதில்லை. வசனரீதியாக, வரலாற்று ரீதியாக, தர்க்கரீதி யாக, எப்படி ஆராய்ந்து பார்த்தாலும் மத்தேயு 16ல் இயேசு கிறிஸ்துவுக்கன்றி வேறு எந்த ஒரு மனிதனுக்கும் முக்கியத்துவம் தரப்படவில்லை.[12]

துரதிருஷ்டவசமாக, பேதுருவை உயர்த்துவதோடு, மனிதரை உயர்த்திப் பிடிக்கும் இந்தப் பண்பு தொடங்கவோ முடியவோ இல்லை. சிலர், உங்களுக்கு போதிக்கவும், உங்கள் ஜெபங்கள் தேவனிடம் சேரவும், சரீர, பொருளாதார மேம் பாட்டுக்கும் ஒரு குறிப்பிட்ட நபர் வந்து ஜெபிக்க வேண்டும் என்கின்றனர். நமது நாட்களில் பாஸ்டரை மையமாய்க் கொண்ட அநேக "சபைகள்" தோன்றி, ஒரு மனிதனை மைய மாக வைத்து ஆயிரக்கணக்கான சிறு குழுக்கள் இயங்கி வருகின் றன. மனிதன்மேல் நம்பிக்கையாய் இருக்கக் கூடியவர்கள் எவரும், அவர் எவ்வளவு தான் நல்லவராய் இருப்பினும் சில வேளைகளில் தொய்வடைந்துபோகும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

நமக்கு தேவை இயேசு கிறிஸ்துவேயல்லாமல், வேறு எந்த ஒரு மனிதரும் அல்ல. இயேசு பரலோகத்திலிருந்து பூமிக்கு வந்து, அழியக் கூடிய மனுஷ சாயலானவர் (பிலிப்பியர் 2:5-8). "அவர் எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிறார்" (எபி. 4:15). அவர் நமது

பலவீனங்களைப் புரிந்துகொள்கிறார்; அவர் நமக்கு உதவி செய்ய முடியும் (எபி. 2:18). அவர் நமது பட்சத்தில், நமது மத்தியஸ்தராக இருக்கிறார் (1 தீமோத்தேயு 2:5).

பவுல் சிறையில் இருந்த போது, "... ஒருவனும் என்னோடே கூட இருக்கவில்லை, எல்லோரும் என்னைக் கை விட்டார்கள், ... கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று, ... என்னைப் பலப் படுத்தினார்" (2 தீமோத்தேயு 4:16-17) என்று எழுதினார். அவர் (கர்த்தர்) உங்கள் பட்சத்திலும் நிற்பார். "உலகம் முடியுமட்டும் சகல நாட்களிலும், நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" (மத்தேயு 28:20) என்று அவர் வாக்குத்தத்தம் செய்துள்ளார்.

## உங்களுக்கு ஒரு ஜனம் தேவை

உங்களுக்கு ஒரு நபரை அளிப்பதோடு தேவன் தமது ஈவுகளை நிறுத்திக் கொள்வதில்லை. அவர் உங்களுக்கு ஒரு ஜனத்தையும் கொடுக்கிறார் - இயேசுவின் மீது உங்களுக்குள்ள விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளவும், வாழ்க்கையில் உங்களுக்கு ஏற்படும் துன்பங்களில் உங்கள் துணையாக இருக்கவும் இந்த ஜனங்களால் முடியும்.

மறுபடியும் நாம் வசனங்கள் 18 மற்றும் 19ஐப் பார்ப்போம், இம்முறை இவ்வசனத்தை வேறொரு கோணத்தில் பார்க்கி றோம். "மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன்; நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன் ..." இவ்வசனங்கள் இந்நபரோடு விசேஷித்த உறவு கொண்டுள்ள ஒரு ஜனத்தைப் பற்றிக் கூறுகின்றன.

இயேசு, "இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்" என்றார். "சபை" என்ற வார்த்தை "எக்லேஷியா" என்ற கிரேக்க வார்த்தையின் மொழியாக்கம் ஆகும். இது "வெளியே அழைக் கப்பட்டவர்கள்"[13] என்று பொருள்படும் கூட்டு வார்த்தையா கும். சபையார் யாவரும், "வெளியே அழைக்கப்பட்டவர்கள்" ஆவார்கள். அதாவது இந்த உலகத்திலிருந்து, இயேசுவோடு ஒரு புதிய உறவுக்காய் அழைக்கப்பட்டவர்கள். அப்போஸ்தலர் நடபடி நூலில், ஜனங்கள் சுவிசேஷத்தினால் அழைக்கப் பட்டனர் (2 தெசலோ. 2:14). அந்த அழைப்பிற்கு, இயேசுவின்

மீது விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் (தண்ணீரில் மூழ்குதல்) இவைகளால் அவர்கள் பதில் அளிக்கும்போது கர்த்தர் அவர்களைத் தமது சபையில் சேர்க்கிறார் (அப். 2:38, 41, 47). கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட ஜனங்களைக் கொண்ட சரீரமே சபையாகும் (அப். 20:28; எபேசி. 5:23, 25).

சபை கிறிஸ்துவின் விசேஷித்த ஜனங்களால் ஆனது. "இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்'' என்று இயேசு கூறினார். சபை என்பது ஒருமை வார்த்தை, ஒரே சபைதான் உண்டு (1 கொரி. 12:13; எபேசியர். 1:22-23; 4:4; கொலோ. 3:15). மேலும் இது அவருடைய சபை; இது அவருக்கு மட்டுமே உரித்தானதாகும். சபையின் உறுப்பினர் ஒவ்வொருவரும் "கிறிஸ்தவர்கள்'' (அப். 11:26; 26:28; 1 பேது. 4:16) என்று அழைக்கப்படுகின்றனர். இதன் பொருள் ''கிறிஸ்துவுக்கு உரியவர்கள்" என்பதாகும். மொத் தத்தில், சபை "கிறிஸ்துவின் சபை'' என்னப்படுகிறது அல்லது ''கிறிஸ்துவின் சபைகள்'' (ரோமர் 16:16)[14] என்றும் கூறப்படலாம். இதன் பொருள், "கிறிஸ்துவுக்குரிய சபை" ஆகும்.

"சபை'' என்று அழைக்கப்படும் இந்த விசேஷித்த ஜனங்களுக்கு, விசேஷித்த ஒரு அஸ்திபாரம் உண்டு. "இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்" என்று இயேசு கூறினார். "கல்'' என்பது பேதுருவின் விசுவாச அறிக்கையாகும். இயேசு, "ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் கிறிஸ்து" என்பது உறுதியான சத்தியம் ஆகும். பவுல், "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது" (1 கொரி. 3:11) என்று எழுதினார். இயேசு நமது "கன்மலை (பெட்ரா)" (1 கொரி. 10:4), எல்லா நிறுவனங்களுமே கருத்துக்கள், நோக்கங்கள் அல்லது ஜனங்கள் இவற்றால் உண்டாக்கப்படுகின்றன-சில சமயம் இவை மகத்தானதாகவும் சில சமயம் அப்படியில்லாததாகவும் இருக்கின்றன. எந்த நிறுவனமும் அதன் தோற்றுவாயைக் காட்டிலும் (அஸ்திபாரத்தைக் காட்டிலும்) சிறப்பானதாய் இருக்க முடியாது. சபையின் அஸ்திபாரம் இயேசு கிறிஸ்துவே!

விசேஷித்த அஸ்திபாரத்தைக் கொண்ட இந்த விசேஷித்த குழு, விசேஷித்த குணாதிசயங்கள் கொண்டதாய் இருக்கின்றது. இது அழிக்க முடியாததாகும். இயேசு,"இந்தக் கல்லின்மேல்

என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள்[15] அதை மேற்கொள்வதில்லை" என்று கூறினார். பாதாளம் என்றால், மரித்துப்போன ஆவிகள் நியாயத் தீர்ப்புக்காகக்[16] காத்திருக்கும், காணப்படாத அல்லது கண்ணுக்குத் தெரியாத ஒரு உலகம் ஆகும். இந்த உலகத்தின் "வாசல்" என்பது சரீர மரணம் ஆகும். மரணம் உட்பட எதுவும் சபையை மேற்கொள்வதில்லை!

இயேசுவின் இந்த வார்த்தைகள் உண்மையாது என்பதை வரலாறு நிரூபித்துள்ளது. இயேசுவைக் கொலை செய்வதன் மூலம் சாத்தான், அவர் சபையை ஸ்தாபிப்பதைத் தடை செய்ய முயன்றான், இருப்பினும் அவரது மரணமே நமக்கு இரட்சிப்பைக் கொண்டுவந்தது. சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்பு, அதன் உறுப்பினர்களைக் கொலை செய்வதன் மூலம் சாத்தான் சபையை அழிக்க மரணம் என்ற கருவியைப் பயன்படுத்தினான். இப்படி மரணமடைந்தவர்களின் இரத்தம், சபை இன்னும் பரவ உரமாயிற்று!

சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் கொல்லப்பட்டாலும், சபை அழியாது; ஏனென்றால் இராஜ்யத்தின் "விதை" "தேவனுடைய வசனம்" ஆகும் (லூக்கா 8:11). தேவனுடைய வசனம் அழிவில்லாதது ஆகும் (1 பேதுரு 1:23-25). வசனம் நிலைத்திருக்கும்வரை, அது நேர்மையான இருதயங்கொண்ட மனிதர்களால் வாசிக்கப்படும்போது, அவ்விதை அந்த இருதயங்களில் விதைக்கப்படுகின்றது. அவ்விதை கனி தரும்போது, கீழ்ப்படிதலின் விளைவாக ஜனங்கள் சபையில் சேர்க்கப்படுகின்றனர் (அப். 2:38, 41, 47)! இயேசு பிறப்புக்கு அநேக வருடங்கள் முன்னதாகவே தானியேல் முன்னுரைத்தபடி, தேவன் "என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை" (தானி. 2:44) எழும்பப் பண்ணியிருக்கிறார்!

நிறைவாக, விசேஷித்த அஸ்திபாரத்தினாலான விசேஷித்த குணாதிசயங்களால் அமைந்த இந்த விசேஷித்த கூட்டத்திற்கு விசேஷித்த சில தன்மைகள் உண்டு; இது மகிமையுள்ளது; இது தேவனுடைய இராஜ்யம்!

சபையைப் பற்றிச் சொல்லப்படும் ஒவ்வொரு வார்த்தையும் அது எவ்வளவு அதிசயமானது என்று நம்மைப் பாராட்ட வைக்கிறது. நமது வசனப் பகுதியில் "சபை" மற்றும் "இராஜ்யம்" என்ற இரு வார்த்தைகள் பயன்பட்டுள்ளன. உலகத்தைப்

பொறுத்தமட்டில் இது “சபை” அதாவது “வெளியே அழைக்கப் பட்டவர்களின் கூட்டம்'' என்னப்படுகிறது. தேவனைப் பொறுத்தமட்டில், இது தேவனின் ஈகையுள்ள சட்டம் மற்றும் அவரது பாதுகாப்பில் தங்களை ஒப்படைத்த ஜனங்களைக் கொண்ட அவருடைய இராஜ்யம் ஆகின்றது.

வேறு இடங்களில் மற்ற சில வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டுள்ளன: இயேசுவைப் பொறுத்தமட்டில், சபை கிறிஸ்து வின் சரீரமாகும் (எபேசி. 1:22-23). மீட்பரோடு வலுவான உறவுள்ள, அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்பட்ட ஜனமே சபையாகும். ஒருவர் மற்றொருவரைப் பொறுத்தமட்டில், சபை தேவனுடைய குடும்பம் ஆகும் (1 தீமோத்தேயு 3:15). தேவன் நமது பிதா, இயேசு நமது மூத்த சகோதரர், நாம் அனைவரும் கிறிஸ்துவுக்குள் சகோதர, சகோதரிகள்!

இந்த மாபெரும் சத்தியங்களைக் கவனிக்கும் போது, “இப்படிப்பட்ட ஜனங்கள்தான் நம் ஒவ்வொருவருக்கும் தேவை” என்ற முடிவுக்கு நாம் வருவது நிச்சயம்!

நானும், என் குடும்பமும் உலக முழுவதும் சுற்றி வந்த போது, நாங்கள் எங்கு இருந்தபோதிலும் கிறிஸ்துவுக்குள் சகோ தர, சகோதரிகளை நாங்கள் காண முடிந்தது. அவர்கள், நாங்கள் பேசாத வேறு ஒரு மொழியில் பேசினாலும், இயேசுவின் மீதுள்ள விசுவாசம் மற்றும் அவருக்காக நமது ஒப்படைப்பு என்ற கண்ணுக்குத் தெரியாத இணைப்பு நமக்குள் விளங்குகிறது.

பாரீஸ் நகரில் ஒரு மாலைப் பொழுது என் நினைவுக்கு வருகிறது. நானும், என் குடும்பமும் மே 1, 1973 அன்று பாரீஸ் நகர் சென்று சேர்ந்தோம். பாரீஸின் புறநகர்ப் பகுதியில் சபை கூடி ஆராதிக்கும் கட்டிடத்தின் மாடிப் பகுதியில் உள்ள ஊழியர் குடியிருப்பில் நாங்கள் தங்க ஏற்பாடு செய்திருந்தோம். பிரென்ச்சு ஊழியர் கார்டினல் அவர்கள் வாரத்தின் இடை நாள் ஜெப வேளைக்கு அரைமணி நேரம் முன்னதாகவே அங்கு வந்து, எங்களைக் கட்டிடத்திற்குள் அழைத்துச் சென்று, மாடி யில் உள்ள வசிப்பிடத்தை காட்டினார். நாங்கள் விரைவில் எங்களை சுத்தம் செய்துகொண்டு, இடை நாள் ஜெபக் கூட்டத் திற்கு வந்தவர்களைக் காணும்படிக்குக் கீழே இறங்கி வந்தோம். மே 1, ஐரோப்பாக் கண்டத்தில் பெரிய விடுமுறைநாள் ஆகும்.

அநேக ஜனங்கள் நகரத்தை விட்டுச் சென்றிருந்தனர். எனவே அங்கு ஒரு சிலரே கூடியிருந்தனர். நாங்கள் அங்கு நின்று கொண்டு சில வார்த்தைகள், பல சைகைகளால் அவர்களோடு தொடர்பு கொள்ள முயற்சி செய்தோம். சற்றுநேரம் கழித்து, ஊழியர் எங்கள் குடும்பத்தைக் கதவுக்கு வெளியே அழைத்துச் சென்று, "ஆர்க் டி டிரையம்ப்" என்று கூறி தெருவைச் சுட்டிக் காட்டினார். முதலில், நாங்கள் அவர் மறு நாளில் எங்களை ஊரைச் சுற்றிப் பார்க்கும்படி கூறுகிறார் என்று நினைத்தோம். இறுதியாக, அவர் அந்த இரவே எங்களை அப்படிச் செய்யும்படி கூறியதைப் புரிந்துகொண்டோம். மிகவும் சிரமப்பட்டு அவருக்கு, எங்களது நோக்கம் ஊரைப் பார்ப்பது அல்ல, ஆனால் நமது சகோதர சகோதரிகளோடு சேர்ந்து தேவனை தொழுது கொள்ளவே வந்தோம், என்பதைப் புரிய வைத்தோம்.

இறுதியாக நாங்கள் மறுபடியும் உள்ளே சென்றோம். அங்கு சிறு அறையில் நாங்கள் அனைவரும் ஒரு மேஜையைச் சுற்றி அமர்ந்தோம். சகோதரர் கார்டினல் பிரென்ச்சு மொழியில் சில பாடல்கள் ஆரம்பித்தார். அதனுடைய மெட்டுக்களைப் புரிந்து கொண்டு நாங்கள் ஆங்கிலத்தில் அவைகளைச் சேர்ந்து பாடினோம். சகோதரர் கார்டினல் பிரென்ச்சு மொழியில் ஜெபம் செய்தார். பிறகு என்னை ஆங்கிலத்தில் ஜெபிக்கும்படி சொன் னார். அவர் எங்களைப் புரிந்துகொள்ள முடிந்தது. ஓரிடத்தில் அவர் எங்களை ஒரு உதாரணமாகப் பயன் படுத்தியது தெளி வாயிற்று, நாங்கள் எங்கள் வீட்டை விட்டு ஆயிரக்கணக்கான மைல்கள் அப்பாலிருந்தோம்; அங்கு நாங்கள் மொழிபேச முடியாதவர்களாயிருப்பினும், அங்கும் நாங்கள் ஒரு குடும்பத்தோடுதான் இருந்தோம்.

நான் பிரசங்கிக்கும் இடங்களில், பலசமயங்களில் ஞானஸ் நானத்திற்குப் பின்பு நாங்கள் ஒன்று சேர்ந்து ஜெபம் செய் வதுண்டு. புதிதாய் கிறிஸ்துவர்களானவர்களிடத்தில், நான் எப் பொழுதும், "இந்தச் சிறிய குழு உலகம் முழுவதிலும் உள்ள பெரிய குடும்பத்தைக் குறிப்பதாயிருக்கிறது! நீங்கள் உலகில் எங்கு சென்றாலும் இதே விசுவாசம் கொண்ட, உங்களிடம் அன்பு காட்டும், உங்கள்மேல் அக்கறையாயிருக்கும் மற்ற சகோதர, சகோதரிகளைக் காணமுடியும்" என்று சொல்லுவேன்.

உங்களுக்கு இது தேவை; உங்களுக்கு இது தேவையென்று

கர்த்தரும் அறிவார். எனவே தான் அவர் சபை என்றழைக்கப் படும் விசேஷித்த குழுவைக் கொடுக்கிறார்.

துரதிர்ஷ்டவசமாக, இந்த ஏற்பாடு தானாகவே உண்டா வதில்லை. நீங்கள் சபை உறுப்பினராய் இருந்தும், தனிமைப் படுத்தப்பட்டவராயிருக்கக் கூடும். யாரோ ஒருவர் "தனிமைப் படுத்திக் கொள்வதைக் காட்டிலும், தனிமைப்படுத்தப்படுவது பெரிய விஷயமல்ல"[17] என்று சொல்லுகிறார். வேறொருவர், "தனிமை என்பது உள்ளிருந்து மட்டுமே திறக்கக் கூடிய சிறைச் சாலையாகும்" என்று குறிப்பிட்டுள்ளார்.[18] தேவன் உங்கள் வாழ்வை ஆசீர்வதிக்க சபையை ஸ்தாபித்தார், ஆனால் நீங்கள் இந்த ஈவைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். தீயணைப்புக் கருவி சரியாக இருக்கிறதா என்று எப்போதாவது ஒரு முறை பார்த்துக் கொள்வதைப் போல, நீங்கள் சபை ஆரா தனைக்கு எப்போதாவது ஒரு முறை வந்துவிட்டுப் போவ தென்பது, இதைச் சரியாகப் பயன்படுத்துவதாகாது. மாறாக, வலிமையான உறவுகளை நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண் டும். நீங்கள் சபையின் வாழ்விலும், ஊழியத்திலும் ஈடுபாடு கொள்ள வேண்டும். நீங்கள் இவைகளைச் செய்யும்போது, தேவன் நமக்களித்துள்ள ஈவு எவ்வளவு அற்புதமானது என்பதை உணர்வீர்கள்!

பல சமயங்களில் நான் பின் கண்டவை போன்ற கவலை யான வார்த்தைகளைக் கேள்விப்படுவதுண்டு: "நாங்கள் புதிய இடத்திற்கு சென்றுள்ளோம் ... ஆறு மாதமாயிற்று ... இன்னும் எங்களுக்கு நண்பர்கள் யாரும் இல்லை."[19] நான் இப்படிப் பட்ட உணர்வுப் பூர்வமான வார்த்தைகளைக் கேட்கும்போது, "இவர்களுக்கு கர்த்தருடைய சபை தேவை! எங்கள் குடும்பம் அங்கு செல்ல முடிந்தால், அவர்களுக்கு மிக அருகிலேயே நாங்கள் உதவக் கூடிய ஒரு குழுவாயிருக்க முடியுமே" என்று நினைப்பதுண்டு. சபை உறுப்பினர்கள், "சபையில்லையென் றால் நான் என்ன செய்வேன் என்று எனக்குத் தெரியாது" என்று சொல்வதை அடிக்கடிக் கேட்டிருக்கிறேன். மேலும் அவர்கள், "சபை இல்லாத ஜனங்கள் என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லையே!" என்றும் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

என்னைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள். ஆவிக்குரிய வகையில் மட்டும் உதவி செய்யும் குழு என்று நான் சொல்ல வில்லை. "சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாக" அது தேவ

னால் உண்டாக்கப்பட்டது (1 தீமோத்தேயு 3:15); அது "தேவனுடைய அநந்த ஞானத்தை வெளிப்படுத்துவதற்காகவும்'' உண்டாக்கப்பட்டது (எபேசி. 3:10). பரலோகத்திற்குரிய இவ்வூழியங்களை நிறைவேற்றுகின்ற அதே வேளையில், வாழ்க்கைப் புயலில் சிக்கியுள்ளவர்களுக்குப் புகலிடமாகவும் சபை திகழ்கிறது.

மேலும், சபை என்பது ஒருசாரார் எப்போதும் உதவி செய்பவராகவும், மறுசாரார் உதவியைப் பெறுபவராகவே இருக்கும் அமைப்பாகிவிடக்கூடாது. சிலர் சபையின் இப் பண்பை தவறாய்ப் பயன்படுத்திக்கொள்கின்றனர். அப்படிப் பட்டவர்கள், "சபையில் உள்ள மற்றவர்கள் எப்பொழுதும் என் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்" என்ற நடக்கையைக் கொண்டுள்ளனர். சபை என்பது ஒருவருக்கொருவர் ஆவிக் குரிய வகையில் உதவி செய்துகொள்ளும் குழுவாகும்; நாம் ஒருவர் மீது ஒருவர் அக்கறையுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

மத்தேயு 16:13-19 வரையுள்ள வசனங்கள், சபை என்பது நம் எல்லாருக்கும் தேவையான ஜனம் என்று அறிவிக்கின்றன!

## முடிவுரை

மத்தேயு 16ல் வாக்குத்தத்தம் செய்த சபை/ராஜ்யத்தை இயேசு எப்பொழுது கட்டினார்? அவருடைய இந்த மாபெரும் வாக்குத்தத்தம் அப்.2ல் நிறைவேறினதாயிருக்கிறது.

கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப்பின் வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில், பேதுரு எழுந்து நின்று நம் எல்லாருக்கும் தேவையான நபரைப் பற்றிப் பிரசங்கம் செய்தார்:

> "ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையை தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள்" என்றான்.
>
> இதை அவர்கள் கேட்டபொழுது இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: "சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்,

அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' (அப். 2:36-38).

பேதுரு உண்மையில், "நீங்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறும்போது, கடந்த காலம் கவனிக்கப்படும்: உங்கள் கடந்த காலப் பாவங்களுக்கு நீங்கள் மன்னிப்புப் பெறுவீர்கள். எதிர் காலத்தில் உதவியும் பெறுவீர்கள்: கிறிஸ்தவ வாழ்க்கையில் உங்களுக்கு உதவ தேவஆவியானவரைப் பெறுவீர்கள்'' என்றார். இதையே வேறொருவகையில், "நீங்கள் ஞானஸ்நானம் பெறும்போது, உங்களுக்குத் தேவையான ஒரு நபரோடு நீங்கள் இரட்சிக்கின்ற மற்றும் பலம் தருகின்ற உறவைப் பெறுவீர்கள்'' என்றும் கூறலாம். பவுல் இதை, "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே'' (கலா. 3:26-27) என்கிறார்.

அப். 2:41ல், "அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வசனம் 47 "இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்'' என்று கூறுகிறது. அவர்கள் இயேசுவுக்குள்ளாக மட்டுமின்றி, அவருடைய சரீரமாகிய சபைக்குள்ளாகவும் ஞானஸ்நானம் பெற்றனர் (1 கொரி. 12:13; எபே. 1:22-23). அந்த சரீரத்தில் அவர்களுடைய உறவுபற்றி, அப். 2:42, 44ல், "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். ... விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்'' என்று கூறப்படுகிறது. அவர்கள் தங்களிடம் இருந்தவைகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டனர். இவ்வாறாக, புதிய கிறிஸ்துவர்கள் தங்களுக்குத் தேவையான ஜனங்களையும் பெற்றிருந்தனர்.

உங்களுக்கு ஒரு நபர் தேவை: இயேசு கிறிஸ்துவே அவர் - உங்களுக்கு ஒரு ஜனம் தேவை - கிறிஸ்துவின் சபையாரே

அவர்கள். கிறிஸ்துவுக்குள்ளும், அவருடைய சரீரத்திற்குள்ளும் நீங்கள் இன்னும் ஞானஸ்நானம் பெறாதிருந்தால், உடனடியாக நீங்கள் ஞானஸ்நானம் பெற்று உங்கள் வாழ்க்கை யின் மிகப் பெரிய தேவைகளில் நீங்கள் திருப்தியடையும் படியாக ஜெபிக்கிறேன்

## குறிப்புகள்

[1]பேஸ்ட்டல் பேரட் பேக்ஸ்ட்டர், "வாழ்க்கை சீர் குலையும் வேளையில்" (கிரான்ட் ரேப்பிட்ஸ், மிச்சிக்கன்.: பேக்கர் புக் ஹவுஸ், 1974), 22. [2]"வலைப்பின்னல்", மற்றும் "உதவி செய்யும் குழு" என்பவை மற்ற ஜனங்களுடன் உள்ள உதவக்கூடிய உறவுகளுக்குள்ள இன்றைய சொற்றொடர் களை நீங்கள் பயன்படுத்தலாம். [3]லூக்கா 3:1. [4]"வரவேண்டியதாயிருந்த எலியா" யோவான்தான் என்று இயேசு குறிப் பிட்டார் (மத்தேயு 11:14). [5]இயேசு எண்ணங்களை அறியக் கூடியவராயிருந்ததால், என்னைப்போல பயமுள்ளவராய் இருந்திருக்க மாட்டார்! [6]"பாதத்தை வாய்க்குள் வைத்துக் கொள்ளுதல்" என்பது தேவையில்லாத வார்த்தை பேசி ஒருவரை சங்கடத்திற்குள்ளாக்குவதாகும். [7]"பர்யோனா" என்பது "யோனாவின் குமாரன்" என்று பொருள்படும். நவீன மொழிபெயர்ப்பில் "யோனாவின் மகன்" அல்லது "யோனா மகன்" எனப்படலாம். [8]அமெரிக்கா மற்றும் சில இடங்களில் மாணவர்களைப் பாராட்டுவதற்காக, வகுப்பிற்கு முன் அவர்கள் வந்து நிற்கச் செய்வது வழக்கம் (தகுதிச் சான்றிதழ் பெறக் கூட இம்முறை பயன்படுகிறது). [9]அதிகாரம் 26. [10]1973 பதிப்பு.

[11]எழுத்து, பால், பொருள் என்ற மூன்று அடிப்படை வேறுபாடுகள் "பெட்ராஸ்" மற்றும் "பெட்ரா" என்ற இவ்விரு வார்த்தைகளுக்குமிடையில் இருக்கின்றன. [12]இக்குறிப்பிட்ட நிறுவனத்தில், பேதுரு மட்டுமே "உங்களுக்குத் தேவைப்படும் ஒருவர்" என்ற தகுதிக்கு உயர்த்தப்படுவதில்லை. சிலர் இயேசுவை அடைய உங்களுக்கு "ஒரு தாயின் ஸ்பரிசம்" தேவை (அதாவது மரியாள்) தேவை என்கின்ற னர். மேலும் இவர்கள், ஆவிக்குரிய விஷயங்களில் விசேஷித்த செல்வாக்குடைய "புனிதர்களும்" இருப்பதாக வலியுறுத்துகின்றனர். [13]"எக்லேஷியா' என்பது 'எக்" மற்றும் "கலேஷியா" என்ற வார்த்தைகளிலிருந்து வருகிறது. [14]"சபை' என்ற வார்த்தை உலகளாவிய விதத்தில், இயேசுவோடு உறவு கொள்ள உலகெங்கிலும் உள்ள அழைக்கப்பட்டுள்ள அனைவரையும் குறிப்பிடப் பயன் படுத்தலாம். இந்தப்பொருளில் இது ஒருமைச் சொல்லாகப் பயன்படுகிறது (மத்தேயு 16:18). "சபை' என்ற இவ்வார்த்தை ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருக்கின்ற, அழைக்கப்பட்ட ஜனங்களையும் குறிக்க பயன்படுகிறது. இவ்வித பயன்பாட்டில், இது ரோமர் 16:16ல் உள்ளதுபோல பன்மைப் பெயர்ச் சொல்லில் பயன்படுத்தப் படலாம். புதிய ஏற்பாட்டில் சபையானது, தேவனுடைய சபை (அப். 20:28) முதலிய பெயர்களாலும் குறிக்கப்படுகிறது, இப்படியுள்ள இன்னும் அநேக வார்த்தைகளும் கூட அடிப்படையில் "கிறிஸ்துவின் சபை" என்பதைப் போலவே உள்ளன. [15]KJVயில் இது "Hell" என்றுள்ளது. KJVயில் மூன்று வித்தியாசமான கிரேக்க வார்த்தைகள் "Hell" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளன: (1) Gehenna, இது "நரக நெருப்பு" என்ற வார்த்தையாகும் (மத். 5:22 முதலியன); (2) Hades, இது "காணப்படாத (உலகம்)" அதாவது மரித்தவர்களின் உலகம் (அப். 2:27; முதலியன); மற்றும் (3) டார்ட்டாரஸ், மரித்த துன்மார்க்கரின் நிலையைக் குறிக்கும் சொல்லாகும் (2 பேதுரு 2:4). மத்தேயு 16:18ல் உள்ளது Hades என்ற வார்த்தையாகும். நரகத்தின் சக்திகளான சாத்தான்

மற்றும் அவன் தூதர்கள் சபையை அழிக்க முடியாதென்பதை இவ்வசனம் நேரடியாய் போதிக்கிறது - ஆனால் இவ்வார்த்தைகளின் உண்மைப் பொருள் அதுவல்ல. [16]லூக்கா 16:19-31; 23:43; அப். 2:31; யோவான் 20:17. [17]ஹரோல்டு W.ரோப் என்பவர் லேயனோர்டு லூயிஸ் லேவின்ஸனின் வெப்ஸ்ட்டரின் பயமற்ற அகராதி என்ற நூலில் (நியூயார்க், N.Y.; கூல்லியர் புக்ஸ், 1967), 143ல் இவ்விதம் குறிப்பிட்டுள்ளார். [18]லேயனோர் லூயிஸ் லேவின்ஸனின், வெப்ஸ்ட்டரின் பயமற்ற அகராதி (நியுயார்க் N.Y.; கூல்லியர் புக்ஸ், 1967), 143ல் "அன்ன பெல் ஜிரிச்" என்பாரைச் சார்ந்தது. [19]எனது மகளின் தோழி ஒருத்தி லூகேமியா என்ற வியாதியால் பாதிக்கப்பட்ட கவலைக்குரிய சம்பவம் என் மனதில் எழுகின்றது. அவளது வீட்டார் யாவரும் ரோட் தீவுகளுக்கு குடியிருக்கச் சென்றனர். அங்கு இந்தத் துன்பத்திலிருந்து அவர்களை விடுவிக்க ஆளின்றி அவதிப்பட்டனர். அவர்களுக்கு அங்கே நண்பர்களோ உறவினர்களோ எவரும் அருகில் இருக்கவில்லை.